ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

भवजलधिगतानां द्वंद्ववाताहतानां
सुतदुहितृकलत्रत्राणभारार्दितानाम् ।
विषमविषयतोये मज्जतामप्लवानां
भवति शरणमेको विष्णुपोतो नराणाम् ॥

मुकुन्दमालास्तवे ।

ஸம்ஸாரமென்னும் ஸமுத்திரத்தை யடைந்தவர்களாயும்; சுகம், துக்கம், சீதம், உஷ்ணம், முதலான இரட்டைகளான காற்றினாலடிக்கப்பட்டவர்களாயும்; பெண், பிள்ளை, களத்திரம், இவர்களைப் பாதுகாப்பதென்கிற பாரத்தினால் அமிழ்த்தப் பட்டவர்களாயும்; குரூரமான விஷயமென்னும் ஜலத்தில் மூழ்கினவர்களாயும் அதிலிருந்தும் கரையேறுவதற்குற்ற ஓடமில்லாமல் சிரமப்படுகிறவர்களுமான மனிதர்களுக்கு ஸ்ரீ வைகுண்டவாஸியான விஷ்ணு பரமாத்மா என்று பெயர்வாய்ந்த ஒரு ஓடம் உண்டு. அதையே சரணாகதியாக அடைந்தால் கரையேறலாம்.

குடும்பபாரமென்கிற அதிக பாரத்தால் பீடிக்கப்பட்டும் சுகதுக்கம் சோகமோஹம் என்கிற காற்றினால் இங்குமங்கும் தள்ளப்பட்டவர்களாயும் ஜனங்களுக்கு இவ்விதமென்று கூறவியலாத கொடிய கஷ்டங்களை யுண்டுபண்ணும் விஷய மென்னும் நீரால் நிரம்பிய பவம் என்று பெயர்பூண்ட மிகவும் பெரிதான கடலின் மத்தியில் விழுந்து கப்பலில்லாமல் எப்படி இதிலிருந்தும் நாம் கரைசேருவோமென்று பலவாறுய்த் தபித்துக் கொண்டிருக்கும் மானிடர்களுக்குப் பகவானான ஸ்ரீமந்நாராயணனே கப்பலாகஇருந்து அங்கிருந்தும் கரையேற்றும் சக்தி பொருந்தியவராகையால், சகல ஜனங்களும் வெகுகாலமாய் அனுபவிக்கப்படும் ஸம்ஸார கஷ்டங்களை அடியோடு விலக்கி சுகித்திருக்கவேண்டி ஸ்ரீ விஷ்ணுவையே எப்பொழுதும் சரணமாகஅடைய வேண்டுமென்று இதினால் அறிவிக்கப்படுகிறது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

குரோதன-ஞு ஐப்பசி-மீ உஎஉ

ஸ்ரீராகவன் தசரதருக்குச் செய்த உபதேசம்.

(சூ ௨௦-வது பக்கத்தொடர்ச்சி)

கீழ்கூறியவாறு தங்களுக்குச் சங்கை நிகழலாம். அதுசரியல்ல என்பதையும் திருஷ்டாந்த வாயிலாகக் கூறுகின்றேன். கேளும், சுக்தியில்(கிளிஞ்சலில்)வெள்ளி என்கிற தோற்றமேற்படுவதுபோலும், கானலில் ஜலமிருப்பதாகத்தோன்றுவதுபோலும்,கயிற்றில் அரவமென்கிற தோற்றம்போலும் நித்யமான ஆத்மஸ்வரூபத்தில் அநித்தியமாயும் ஆபாஸமாயுமுள்ள இந்த ஜகத்தானது அக்ஞானிகளால் கற்பிக்கப்படுகின்றது. இதனால் கிளிஞ்சல், கயிறு முதலிய வஸ்துக்களில் அவைகளின் உண்மையான ஸ்வரூபம் அக்ஞானத்தால் அடையப்படாமலிருக்கும்பொழுது பளபளப்புடன் கூடிய வெண்ணிறத்தாலும், நீண்டு இருப்பதாலும் பிரமத்தால் அவைகளை வெள்ளியென்றும், பாம்பென்றும், பார்க்கும்பொழுது கிளிஞ்சல் கயிறு என்கிற வஸ்துவின் உண்மையான ஞானம் ஏற்படுகிறதற்கு முன் பிரம ஞானத்துடனிருக்கும் வரையில் எப்படி அவ்விரண்டும் உண்மையான வெள்ளியாகவும், பாம்பாகவும், தோன்றி வஸ்து யதார்த்த ஞானம் ஏற்பட்டபிறகு மாறுகின்றனவோ; அவ்விதமே பரமார்த்த ஸ்வரூபமாய் விளங்கும் ஆத்ம வஸ்துவின் உண்மையான ஞானம் ஏற்படாமல் அக்ஞானத்தினல் ஆத்ம வஸ்துவில் கற்பிக்கப்படும் சகல ஜகத்தும் உண்மையாகத் தோன்றும். கிளிஞ்சல், கயிறு இவைகளின் உண்மையான ஞானம் ஏற்பட்டவுடன் வெள்ளி, பாம்பு என்கிற தோற்றம்எப்படிப் போய்விடுகின்றதோ; அவ்விதமே ஆத்மஞான மேற்பட்டவுடன் கற்பிதமான ஜகத்தும் இல்லாமல் போய்விடும்.

अज्ञानदृष्टिभिर्नित्यं मन्यते ननु पण्डितैः ।
आत्मा शुद्धो निर्व्यलीकस्सच्चिदानन्दलक्षणः ॥

இவ்விதம் அநித்யமாயிருக்கும் இந்த ஜகத்தை அக்ஞானிகள் பார்த்து நித்யமாகக் கருதுவார்களேயல்லாமல் சிறந்தஞானத்தை யடைந்த பண்டிதர்கள் கருதமாட்டார்கள். ஆத்மாவானது சுத்தமாயும், ஸத்யமாயும், ஸத் சித் ஆனந்த ஸ்வரூபமாயும் விளங்குகின்றது.

यस्यांशांशेन विश्वेश ब्रह्माद्यास्सकला वयम् ।
स्थित्युत्पत्तिविनाशार्थं नानारूपाणि मायया ।
धार्यते नटवद्राजन् न तेष्वासक्त एव सः ॥

யாதொரு பரமாத்மாவினுடைய மிகவும் அற்பமான அம்சத்தால் பரமேசுவரன், பிர்மாமுதலான நாங்களனைவரும் ஸருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்கிற கார்யங்களைச் செய்யவேண்டி மாயையால் நாடகத்தில் நடிப்பவர்போல் பல ரூபங்களைத்தரிக்கும்படி செய்யப்படுகின்றோமோ, ஹே, அரசனே, இவ்வித கார்யங்களில் அந்த பரமாத்மாவானவர் சம்பந்திப்பதே இல்லை.

यथा पद्मं न स्पृशति जलं मायां तथाऽमलः ।
आत्मा नित्यो न स्पृशति परमानन्दविग्रहः ॥

நித்யமாயும், சுத்தமாயும் மிகவும் உத்தமமான ஆனந்த ஸ்வரூபமாயும் விளங்கும் ஆத்மாவானது, தாமரை மலரானது எப்படி ஜலத்தில் சம்பந்தப்படுகிறதில்லையோ அப்படியே மாயையுடன் சம்பந்தப்படுகிறதில்லை.

देहागारसुतस्त्रीषु मामिकेति च या मतिः ।
उपसंहृत्य बुद्ध्या संन्यस्य ब्रह्मणि चिद्घने ॥
यद्यत्किञ्चिद्भासतेऽत्र सर्वं नारायणात्मकम् ।
पश्य त्वं सर्वभावेन मुच्यते भवसंकटात् ॥

சரீரம், வீடு, புத்திரன் பத்நி முதலியவைகளில் நம்முடையன என்று அபிமானங்கொண்ட புத்தியை அவைகளிலிருந்தும் திருப்பி அவைகளிலுள்ள பற்றுதலை அறவேயொழித்து அறிவின் உருவாய் விளங்கும் பிர்மத்தினிடத்தில் நன்கு பற்றுதலையடையும்படி செய்து பிறகும் அற்பமாகவாவது எதெது தோன்றுகிறதோ அதைப்பூராவும் ஸ்ரீநாராயணஸ்வரூபமாகவே கருதிப்பார்த்தால் நீர் ஸம்ஸாரத்தினால் ஏற்படும் சகல துக்கங்களிலிருந்தும் விடுபடுவீர்.

सत्यं शौचं दया शान्तिः क्षमा चेन्द्रियनिग्रहः ।
अहिंसा भगवद्भक्तिर्वेदमार्गानुवर्तनम् ।
इत्याद्या ये गुणा राजंस्तान् भजस्व निरन्तरम् ॥

மறுபடியும் ஸ்ரீ ராகவன் தசரதரிடம் அடியில் கூறப்படும் தர்மங்களை நீர் கைவிடாமல் அனுஷ்டிக்க வேண்டுமென்று உபதேசிக்கின்றார்.

அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்கள்.

ஸத்யம். நாம் ஒரு விஷயத்தை எப்படி அறிகிறோமோ அவ்விதமே வாக்கால் வெளியிடவும் மனத்தால் சிந்திக்கவும் வேண்டும். அற்பங்கூட மாற்றக்கூடாது.

சௌசம். இதில் பாஹ்யமென்றும் ஆந்திரமென்றும் இருவகையுண்டு. இரண்டும் வேண்டும். சௌசம் பரிசுத்தம்.

தயா. பிறருக்கு ஏற்படும் துக்கத்தை ஸகியாமல் நம்மால் இயன்றவரையில் அவருக்குதவிபுரிந்து அக்கஷ்டத்தை விலக்க முயலுவதே தயையாகும.

சாந்தி. காமம் குரோதம்முதலான சத்துருக்களின் விஜயம்; விஷயங்களிலிருந்தும் மனதைத்திருப்புவது, இவ்விரண்டும் சாந்தியாகும்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

தீண்டாமை விலக்கு.

சென்னை நகரில் கூட்டம்.

இக்கூட்டம் ஒன்று 31—10—25ல் விக்டோரியா பப்ளிக் ஹாலில், ஸர்.வெங்கட ரத்னத்தின் தலைமையில் கூடிற்று. மகாநாட்டை பித்தாபுரம் மகாராஜா திறந்துவைத்தார். ஸ்ரீமான்கள். டி. வி. சேஷகிரி அய்யர். ஸி. ராஜகோபாலாசாரியார். ஸர். டி. ஸதாசிவய்யர். ஜெ. வெங்கடநாராயணநாயுடு. ஜஸ்டிஸ் வெங்கடசுப்பாராவ். எஸ். துரைசாமி அய்யர். ராவ்பகதூர் வரதராஜுலுநாயுடு. ஸர்.வே. வி. ரெட்டி. ஸர். எ. பி பாத்ரோ. கனம். பனகால் ராஜா. ஸ்ரீமான்கள். ஒ. தனிகாசலம் செட்டியார். ஸி. ஆர். ரெட்டி. கிருஷ்ணராவ் பான்ஸலே. மகாதேவசாஸ்திரியார் முதலிய பல பிரமுகர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர் என்று 2—11—25. சுதேசமித்திரனில் விஷயம் விஸ்தாரமாய் வந்திருப்பதைக் கண்ணுற்றேன். இதிற்பேசிய ஒவ்வொருவருமே தீண்டாமை என்பதை விலக்க வேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்தினர். எல்லோருடைய பேச்சுக்களையும் அப்படியே சொல்லவரவில்லை. அதற்கு நம் மித்திரன் ஒன்றே உலகில் இவ்விதசமாசாரங்களை மட்டிலும் கூசாமற்கூற இருப்பது போதும். ஆயினும் சிலரது வசனங்களை இங்கு குறிப்பிடுகிறேன். ஸர்.டி. ஸதாசிவய்யரவர்கள் தீண்டாமை என்னும் பிசாசை அடித்துவிடவேண்டும். நான் பௌத்தமத்தில் இதற்காகநம்பியிருந்ததுண்டு. ஆனால் பௌத்தரும்விஷ்ணு அம்சம். நாமெல்லோரும் நெல்லிக்காய்மூட்டை, இதை அஸூயையில்லாது வெள்ளைக்காரரிடம் கற்றுக்கொண்டு இதை உதைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்கிறார்கள். ஆரியர்களே ? இவ்வையர் வெகு நாளாய் நம்மதக் கோட்பாடுகளுக்கு நேர்விரோதமாய்ப் பிரசாரம் செய்பவரென்றும் நம் வருணாசிரம தர்மத்தையும் சாஸ்திரங்களையும் தைவத்தையுங்கூட இகழ்ந்து பேசுபவரென்றும் யாவருமறிந்திருப்பார்கள். ஆகவே இவரது வாக்கினின்றும் உண்டாகும் இவ்விஷயம் வியக்கத்தக்கதல்ல ஆனால் தீண்டாமை என்னும் பிசாசு எங்கே எவ்வித ஸ்வரூபத்தோடு எவ்விதம் உட்கார்ந்திருக்கிறது. அதை அறிந்தல்லவா அதை வெருட்ட முயற்சிக்கலாம்.

ஆனால் அதற்கு மந்திரம் உதையாம். அந்த உதையை அஸூயை யில்லாது வெள்ளைக்காரரிடம் கற்றுக்கொள்ள வேண்டுமாம். இது ஒருவாறு சரியாகலாம். ஏனெனில் வெள்ளைக்காரர் பல தடவை களில் நம் இந்தியரைக் காலால் உதைத்துதள்ளிக் கொன்றுவிடுவ தாய்ப் பத்திரிகையில் பிரசுரமாவதுண்டு. அந்த உதையை அய்யர் கற்றுக்கொள்ள சொல்கின்றனர் போலும். அதனால்தான் அஸூ யை இல்லாமல் என்று அடைமொழி சாற்றுகிறார். இதற்கு அய் யர் ஒருவர்தான் தைரியம்பெற்றிருக்கிறார். இதுபோகட்டும். அடுத்து சேஷகிரி அய்யர் "தமது பேச்சில் தீண்டாமை வித்யா ஸம் பாராட்டும் பள்ளிக்கூடங்களுக்கு கவர்ண்மெண்ட் ஆதரவ ளித்தால் அதுகவர்ண்மெண்டென்பதேயாகாது, உயர்வகுப்பினர் தீண்டாதோரென்போர்தங்கள் மத்தியில் சேர்ந்து படிக்கக்கூடா தென்றால் அவர்கள் கவர்ண்மெண்டு உதவியை அபேக்ஷிக்காமலே சொந்தச் செலவில் அவற்றை நடத்தவேண்டும்" என்கிறார். இந்த அய்யர் சொல்வதில் இது கவனிக்கத்தக்கது. அய்யர் வக்கீல் உத்தியோகம் பார்க்கும் காலங்களில் வர்ணாசிரம சிரத்தையோடி ருந்தனர். பிறகு கவர்ண்மெண்டு உத்தியோகத்தில்தான் வர்ணா சிரமக் கட்டுப்பாடெல்லாம் ஆழ்ந்து ஆலோசித்துப் பார்த்ததில் வெறும் கட்டுப்பாடென்பதைத் தெரிந்து கொண்டதாய்ப் பல தடவை கூறியிருக்கின்றனர். ஆகவேதனக்கு அத்தகைய ஞானம் கொடுத்த கவர்ண்மெண்டு இப்படிப் பணம் கொடுப்பது தகுதி யல்லவென்று சொந்தத்துடன் பேசுகிறார். இவரது பேச்சை ஆமோதித்து ஸதாசிவானந்தஸ்வாமி என்பவர் பச்சையப்பன் கலாசாலை ராமகிருஷ்ணமாணவரில்லம் முதலிய விடங்களில் தீண் டாதோரென்போரை சேர்க்காததைக்கண்டித்து பாணம்போட்டு விட்டார். பச்சையப்பன் ராமகிருஷ்ண முதலியவர்கள் வர்ணா சிரம தர்மத்தையே இந்துமதத்திற்கு உயிராக நினைத்திருந்தார்க ளென்பதை இந்த ஸ்வாமி அறியவில்லைபோலும். அடுத்து ஓர் ஸ்திரீபேசியிருக்கிறாள் அதுஸ்திரீ புத்தியானதால் வியப்படைய வேண்டாம். ஏனெனில் स्त्रीबुद्धिः प्रलयावहा ஸ்திரீயின் புத்தி நாச த்தையே உண்டுபண்ணி விடுமென்பதை யாவருமறிவர். இந்த அம்மா ஆழ்வாராதிகளைப்போல் நாம்நாமம் போட்டுக்கொண்டால் ஸம்பந்தி போஜனம் செய்யலாமென்று கூறப்படுகிறது என்கிறார்.

இது எங்கிருக்கும். அம்மாவார்த்தையை நம்பி அவ்விதம் செய்கிறவன் பங்க்தியில் வந்தவுடன் அவனது நடத்தையை நிமிஷத்திலறிந்து எல்லோரும் தாங்கமுடியாமல் ஸன்மானம் செய்துவிடுகின்றனர். அப்போது அவன் அம்மாளுக்கு அம்மரியாதையை எவ்விதம் செலுத்துவானென்பதை நீங்களே ஆலோசித்துப்பாருங்கள். இனி இதற்குமேல் ஸ்ரீமான் பழனிஸாமிபிள்ளை யென்பார் பேசியிருக்கிறார். இதுதான் மிகவிசேஷம். இதைக்கூற வேண்டித்தான் நான் இங்கு விஷயத்தை ஆரம்பித்தேன். ஆகவே ஆஸ்திகன் என்று நினைக்கும் யாரும் இதில் கவனம்செலுத்தவேண்டும். அவரது வசனம்—ஆதித்திராவிடர் கோயிற்குள் செல்லக்கூடாதென்று நிபந்தனையே கிடையாது மனுவின் அதர்மசாஸ்திரத்திலும், நாம் போகக்கூடாதென்று சொல்லவே இல்லை. நாம் சண்டாளரேயல்ல. பொய் சொல்வோன். தாய் தகப்பனுரை நிந்திப்போனே சண்டாளன் என்பதே.

ஆரிய குலோத்தமர்களே ? இங்கு இவரது வார்த்தைகளை ஒவ்வொன்ருக கவனியுங்கள். ஆதித்திராவிடர் கோயிற்குள் செல்லக்கூடாதென்று நிபந்தனையே கிடையாதென்கிருர். எந்தப் புத்தகத்தில் இல்லையென்று ஸ்ரீமான் பிள்ளை கூறுகின்றனர். நாவல்களிலா? அன்யதேச சரித்திரங்களிலா? முதலில் இந்த நிபந்தனை எதில் இருக்கும் என்று தெரிந்துகொண்டாரா? தித்திப்பு இருக்குமிடத்தை யறிவதற்காகப் பாகக்காயையும் வேப்பங்காயையும் எட்டிக்காயையும் கடித்துத்தின்று பார்த்துவிட்டுத் திதிப்பு என்கிறதே கிடையாதென்று சொல்வது போலிருக்கிறது. இனி அடுத்த வார்த்தையின் விசேடத்தை கவனியுங்கள். மனுவின் அதர்மசாஸ்திரத்திலும் நாம் போகக்கூடாதென்று சொல்லவே இல்லை என்கிருர். ஆஸ்திகர்களே ! மனு அதர்மசாஸ்திரமா எழுதினுர் ? அதர்மத்திற்காக சாஸ்திரம் எழுதவேண்டுமோ ? இவ்வசனத்தை அங்கு கூடியிருந்தவர்களும் ஆனந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தனரோ ? இவ்விதம் சொல்லக்கூடாதென்று ஒருவராவது எழுந்திருக்கவில்லையோ ? ஒருவரது மனமும் திடுக்கிடவில்லையோ. ஐயோ! இந்த சபையோர்களா இந்துமதஸ்தர்கள்? இவ்விதம் மதத்தின் மூலபுருடரான மனுவையே கூறிவிட்டால் இவர்

களுக்கு நாம்எங்கிருந்து ஸமாதானம் செய்யமுடியும்? இந்தக்கூட்
டத்தாரால் இந்துமதமும் கோயில்களும் முன்னுக்கு வருமென்று
எண்ணியா கோவில்களின் சீர்திருத்தத்திற்காக அதிகாரிகளாய்
நியமித்திருக்கின்றனர்? என்னசொல்வது! கலியே! என்ன ஆடம்
பரத்தைஇப்போதே ஆரம்பித்துவிட்டாயே? ஒருசமயம் மனுவின்
அதர்மசாஸ்திரம் என்று அச்சுப்பிழையாய் இருக்குமோவென்று
நினைத்தால் அதற்குமிடமில்லை. அதர்மசாஸ்திரம் என்பதற்கு
முன்னும் பின்னும் " " இந்த அடையாளம் கொடுக்கப்பட்டிருக்
கிறது. ஒருசமயம் மறுநாள் பத்திரிகையிலாவது நேற்றுப்போ
டப்பட்டது தவறு என்று வருமோவென்றெதிர் பார்த்தேன்.
அதுவுமில்லை. ஆனால் மறுநாள் பத்திரிகையில் தீண்டாமை வில
குவதா விலக்குவதாவென்று அழகாயும் நியாயமாயும் டி. என்.
சேஷாசலமய்யரென்பவர் விஷயமெழுதி இருந்தனர். இதை அவ்
வகுப்பினர் கவனிப்பார்களா? ஒருபோதுமில்லை. இவ்விதம்
மனம் போனபோக்கெல்லாம் போய்க்கொண்டு பிடிவாதம் செய்
துகொண்டும் மற்றவர்கள் என்ன சொல்கிறார்களென்று செவியில்
வாங்காது சட்டம் செய்துவிடுவோமென்று தைரியமாய்ப்பேசி
உலாவுகிறவர்களுக்கு ஏழைகளான ஆஸ்திகர்கள் யாது செய்யக்
கூடும் ? சரவேசுவரன் எங்கு மளவிலாமல் இருக்கின்றான். அவன்
ஆணைப்படி வருவதையெல்லாமனுபவித்தே தீருவோமென்று
அவனைவழிபட்டு வணங்கி நிற்போமாக. அடுத்து பிள்ளை சொல்
வதில் நாம்சண்டாளரேயல்ல பொய்சொல்வோன் தாய்தகப்பனை
நிந்திப்போரே சண்டாளன் என்கிறார். இவரது வசனப்படி சண்
டாளன் ஒருவனுன்டென்றும் அவன் விலக்கத்தக்கவனென்று
மட்டுமாவது ஒப்புக்கொண்டிருக்கிறாரென்று சந்தோஷமடைய
லாம். ஆனால் நாம்சண்டாளரல்லவென்கிறார். நாம் என்று பொது
வாய் ஸபையோரைப் பார்த்துக் கூறுகின்றனர். இவ்விதம் ஸபை
யோரெல்லாம் சண்டாளனென்று யார் சொன்னார். பொய் சொல்
பவனும் தாய்தகப்பனை நிந்திப்பவனும், என்றதனால் மனுதர்ம
சாஸ்திரம் என்பதை ஒழித்து அதர்மசாஸ்திரம் என்று பொய்
சொன்னதனாலும் தாய்தந்தையர்கள் இருந்த பழமையான வழி
யை விட்டுவிலகி அவர்களை நிந்திப்பதற்குமேலாய் அவர்களுக்குப்

பிடித்தமில்லாத வழியில் நடப்பதனுலும் தன்னையும் தனது வார்த்தையை ஆனந்தமாய் கேட்டுக்கொண்டிருக்கும் ஸபையோர்களும் சண்டாளன் என்று தோன்றும்படி ஸர்வேசுவரன் மனதில் புகுந்து இவ்விதம் வார்த்தை கூறும்படி செய்து விட்டானே? யாதோ, யாம் அறிகிலம். எவ்விதமாயின் என்ன? நாம்ஒருபோதும் அவ்விதம்கூற முன்வரவில்லை. இருக்கட்டும் வர்ணுசிரமதர்மத்தைக் காப்பாற்றவே அவதரித்தபகவான் இன்றும் இருக்கிறுர். நாளையுமிருப்பார், நமக்குக் கவலைஇல்லை, ஸர்வேசுவரன் துணை. ஶ்ரீ ஹார்மாகாண ஸனுதன தர்ம மகாநாடுக்கு ஸனுதனதர்மத்தை ஜாதிமுறைப்படி காப்பதற்காக 475000 ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று 3—11—25 மித்திரனில் பிரசுரமாயிருப்பதையும் கண்ணுற்றேன். ஸர்வேசுவரன் இச்சபையை வளர்ப்பார். ஆஸ்திகர்களான யாவரும் அதில் மெம்பர்களாயச் சேர்ந்து அச்சபையின் கிளைகளை இங்கும் ஸ்தாபிக்க நாம் முன்வந்தால் க்ஷேமமுண்டாகும். சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரீ.

அறிவுடைமை,

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பர் பெரியோர். அன்னுர் மானிடரை இங்ஙனம் புகழ்ந்து கூறுவதற்கும், மானிடர் அங்ஙனம் கூறப்படுவதற்கும் தக்க காரணம் இருக்கவே வேண்டும். அஃது யாதாக இருக்கலாம்? தான் இருப்பதனுலேயே அனைத்தையும் பெற்ற பயனைத்தரும் அறிவுடைமையே அஃதாம்.

ஒருவன் ஒன்றனை மாத்திரம் பெற்று அதைக்கொண்டே அனைத்தையும் பெற்றவனுகவேண்டுமாயின் அவன் அறிவினை உடையவனுகஇருத்தல்வேண்டும். அறிவுடைமைஅறிவினை உடைத்தாயிருக்கும் தன்மை. இத்தொடருக்குக் கல்வி கேள்விகளால் ஆகிய அறிவோடு உண்மை அறிவினையும் பெற்றவனுயிருத்தல் என்பது பொருள்.

அறிவு, தன்னை உடையவனை உடனிருந்து காக்கும் கருவி யாவது; மனத்தை எண்ணியவாறே செல்லவிடாமல் அடக்கி ஆள்வது; பிறரிடமிருந்து மெய்ப் பொருளைக்காணத் துணைபுரிவது; பிறர் நன்கு மதிக்கத்தக்க சொற்களையே சொல்லச் செய்வது; நுண்பொருள்களையும் ஆராயத்துணைபுரிவது, உலகத்தோடு ஒத்துநடக்கச் செய்வது; விருப்பு, வெறுப்புகள் அற்று இருக்கச் செய்வது; நிறைவேற்றக் கூடியதையே தொடங்கத் தூண்டுவது; அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சவும், அஞ்சக் கூடாதவற்றிற்கு அஞ்சாமலும் இருக்கச்செய்வது; வரக்கூடியதாக இருந்த தீங்கினை முற்கூட்டி அறிந்து வராவண்ணம் தடுத்துக்கொள்ளும் வன்மையினைப் பெற்றது. அறிவின்மையே தரித்திரம். அறிவுடைமையே செல்வம். "அறிவுடையார் எல்லாம் உடையார்."

உலகத்துத் தோன்றிய மக்கள் ஒருதலையாக விரும்புவது பேரின்பப் பெருவாழ்வு எய்துவதையே. அப் பேரின்பப் பெருவாழ்வினைப்பெற விரும்புவோர் அறிவினைப் பெற்றவராயிருத்தல் வேண்டும். அறிவினை உடையாராய் அறிவைப்போற்றி அறிவு மயமாய் விளங்குபவரே இன்பவாழ்வினை எய்துதற்கு உரியராவர்.

அறிவு, பிறப்பால் வருவதும் அன்று; குலத்தால் வருவதும் அன்று; மொழியால் வருவதும் அன்று; பொருளால் வருவதும் அன்று, ஆனால், அஃது அன்பினால்பெறலாவது; ஆசிரியரது அறவுரையால் பெறலாவது; ஆண்டவனது திருவருளால்பெறலாவது: அறிவை வளர்த்துக் கொள்பவன் ஆண்டவனை வணங்குபவன் ஆவன். அறிவைப்புகழ்பவன் ஆண்டவனை வாழ்த்துபவன் ஆவன். அறிவைப் புகட்டுகிறவன் தானத்தைக் கொடுக்கிறவன் ஆவன். அறிவை உடையவன் "எந்தவழி சரியானது; எந்தவழி தவறானது" என்பதைப் பகுத்தறிந்து உணர்ந்த ஞானத்தைப் பெற்றவன் ஆவன்.

மனிதர்களின் போக்குவரவு அற்ற பாலைவனத்திலும் ஒருவனுக்கு அவனிடத்திலுள்ள ஞானமாகிய அறிவு உற்றதுணையாக நின்று உதவிகளைச் செய்யும்; உற்றநண்பனும் ஆகும்; பகைவர்களை வெல்லத்தக்க சிறந்த ஆயுதமும் ஆகும்; மோட்சவீட்டை அடைவிக்கும் உண்மையான நேர்வழியைக் காட்டுவதும் ஆகும்.

அறிவைப் பெற்றவனே இம்மை மறுமைப் பயன்களை எய்துதற்கு உரியவன்; 'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்ற தொடரின் பெருமையை உணர்ந்து அந்நிலையிலே நிற்பவன்; துன்பங்களினின்றும் நீங்குபவன்; இன்பங்களை எய்துபவன்; எல்லாவற்றையும் நன்றாகச் செய்பவன், அறிவே இன்பம் இன்பமே அறிவு.

தமிழ் நாட்டிலே பண்டைக்காலத்திலே அறிவுடைய சான்றோர் பலர் இருந்தனர். அவர்களுள் கோவூர் கிழார் என்னும் புலவர் பெருமானார் ஒருவர். அவர் காலத்திலே சோழநாட்டை இரண்டு சோழ அரசர் ஆண்டு வந்தனர். ஒருவனது பெயர் நலங்கிள்ளி. மற்றொருவனது பெயர் நெடுங்கிள்ளி. நலங்கிள்ளிக்குத் தலைநகர் காவிரிப்பூம்பட்டினம். நெடுங்கிள்ளிக்குத் தலைநகர் உறையூர். நலங்கிள்ளி பெரிதும் கற்றவன்; அறிவு நிறம்பியவன்; செல்வத்தின் நிலையாமையை உணர்ந்து புகழொடுவாழ்ந்தவன். நெடுங்கிள்ளி அத்தகையினன் அல்லன்; அறிவற்றவன்; தன்னை ஒத்த அறிவற்றவர்கள் பலருடன் பழகியவன்; நலங்கிள்ளிக்கு விரோதமாகப் பல சூழ்ச்சிகளைச் செய்தவன்.

இங்ஙனமாக நலங்கிள்ளியின் மனம் பெரிதும் புண்பட்டது; கோபங்கொண்டான்; ஒருபெரும்படையைச்சேர்த்துக்கொண்டு சென்றான்; உறையூரை முற்றுகை போட்டான். அதைக்கண்ட நெடுங்கிள்ளியும் பெரும் சினத்தோடு எதிர்க்க எண்ணினான்; சேனையோடு எழுந்தான்; கொடும் போரினைப்புரிந்தான். இருவருடைய சேனைகளிலும் பெருஞ்சேதம் விளையலாயிற்று.

இதனைப் பெரும் புலவரான கோவூர்கிழார் கேள்வியுற்றார். 'சிறந்த கல்வியாளனும்' பேரறிவுள்ளவனும் ஆகிய நலங்கிள்ளி இங்ஙனம் கோபத்தினால் தனது குடியின் பெருமைக்கு ஒவ்வாத காரியத்தைச் செய்கின்றானே' என்று இரங்கினார். அவன்பாற் சென்றார். "ஏ, நலங்கிள்ளி, நான் உனக்கு ஒரு செய்தியைக் கூற விரும்புகின்றேன். தயைசெய்து கேட்பாயாக. இன்று உன்னுடனே போரினைச் செய்கின்றவன் வேப்பமாலையினுடைய பாண்டியன் அல்லன்; பனைத்தோட்டுமாலையைத் தாங்கும் சேரன் அல்லன்; உன்னைப்போலும் ஆத்திமாலையைத்தாங்கும் சோழனே. இஃது உன்னால் அறியப்படாததோ? நீதோல்வியுற்றாலும் அத்

தோல்வியால் ஆகிய இகழ்ச்சி உண்டாவது வடுப்படாத சோழரது குடிக்கே? உன்னுடனே சண்டையைச் செய்கின்ற அவன் தோற்றாலும் அத்தோல்வியால் ஆகிய இகழ்ச்சி உண்டாவது சோழரது குடிக்கே. எவர் தோல்வியுற்றாலும் இருவருக்கும் இழிவே. இருவரும் வெற்றியை அடைவது இயற்கைக்குப் பொருந்தாதே. ஆதலின், ஒரேகுடியிலே பிறந்தவர்களாகிய நீங்கள் இங்ஙனம் போரினைச் செய்வது உங்களது குடியின் பெருமைக்குப் பொருத்தமானதன்று. அன்றியும், நீங்கள் இவ்வாறு ஒருவருக்கொருவர் மாறுபட்டுப் போரினைப்புரிவது உங்களுடைய பகைவர்களான சேர பாண்டியர்களுக்குப் பெரு மகிழ்ச்சியை விளைவிக்குமன்றோ? ஆகவே, நீ இப்போரினைவிட்டுச் செல்வாயாக" என்றார்.

என்றலும், நலங்கிள்ளி 'புலவர் கூறுவது நியாயமானதே; நமது குடிக்குள்ளேயே பகைமைஇருப்பது அழகல்ல. ஒற்றுமை இன்மை வன்மையைக்குறைத்துவிடும்' என்று எண்ணினான். உறையூரினின்றும் நீங்கித் தனது காவிரிப்பூம் பட்டினத்துக்குச் சென்றான். புலவரும் மகிழ்வுடன் சென்றார். உலகினர் அவனது அறிவுடைமையைக் கொண்டாடினர்.

(தொடரும்)

தண்டமிழ்த்தொண்டன்,

சென்ற தீபாவளி.

தீபாவளி விஷயமாய் நான் வெளியிட்டதற்கு மறுப்பாக கடந்த 37, 38 சஞ்சிகைகளில் முறையே பிர்ம்மஸ்ரீ உபபத்திராதிபர்களாலும் மதுரை. M. N. ஸுப்பிரமணிய சாஸ்திரிகளாலும் எழுதிப் பிரகாசப்படுத்தியதை நமது ஆர்ய மதாபிமானிகள் கண்ணுற்றிருக்கலாம். இவ்விரு பண்டித சிகாமணிகளும் (1) புரட்டாசிமீ 30உ க்கு முன்பே இவ்விதம் தெரியப்படுத்தியிருப்பார்களேயானால்எவ்வளவோ மேன்மையாயிருந்திருக்கும். நான் எதிர்பார்த்ததும் இவ்விருவர்களுடைய அபிப்பிராயமென்பது திண்ணம்

என் கடிதத்திலிருந்தே நான் ஸ்ரீஐப்பசிமீ தீபாவளியை நம்பாதவனென்றும், பத்திரிகை மூலமாக புரட்டாசிமீ நரகசதுர்த்தசியை திருடப்படுத்த முயன்றவனென்றும் அறிந்து கொள்ளலாம். ஐப்பசிமீ தான் என்று எண்ணமுள்ளவனாயிருந்தால் "இது விஷயமாய் பண்டிதர்களுடைய அபிப்பிராயத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று முடிவில் எழுதியிருக்க வேண்டியதில்லை.

தீபாவளி விஷயமாய் நான் எழுதியதிற்கு காரணங்கள் "உஷோப்யங்கம்" எனும் வசனத்தை சில வருஷங்களுக்கு முன் கர்ணபரம்பரையாய் கேட்டுளளேன். பிறகு சென்றவுஆர்ய தர்மம் 41 வது ஸஞ்சிகையில் மதிப்புரை வரையப்பெற்ற "தர்ம சாஸ்திர சுருக்கத்தில் கண்ணுற்றேன். அதனால் தூண்டப்பட்டவனாய் இதன் ஆகாத்தை (உத்பத்தி ஸ்தானம்) அறியவேண்டியே எழுதினேன். ஆச்வினமாதல்க்ஷணம் ஐப்பசிக்கே என்றதும், ஸ்வாதி யோகம் சந்திரனுக்கு இருக்கிறதென்றும் சொல்லியது ஷெ வசனத்தை பலப்படுத்தவே யொழிய வேறில்லை. "நக்ஷத்ரேணயுக்த: கால: " என்ற ஸூத்திரம் தத்திதப் பிரத்தியத்தைக் காண்பிக்கவந்தது மட்டிலுமல்ல. பாணினி மஹாஷியின் காலத்தில் உள்ள சந்திர கதியைத் தெரிவிக்கிறது. அதன் பிறகு பூர்ணிமை இரண்டு நக்ஷத்திரத்துடன்கூடி யிருந்தால் பிந்தின நக்ஷத்திரத்தின் பெயராலுள்ள மாதமென்றும் இப்பொழுதோ கீழ்கண்டபடி பூர்ணிமைகளில் நக்ஷத்திரங்கள் வருமென்றும் ஸூர்ய ஸித்தாந்தம் கூறுகிறது.

மாதம்.	நக்ஷத்திரங்கள்.
கார்த்திகை	கார்த்திகை, ரோகிணி
மார்கழி	மிருகசீர்ஷம், திருவாதிரை
தை	புனர்பூசம், பூசம்
மாசி	ஆயில்யம் மகம்
பங்குனி	பூரம் உத்திரம் ஹஸ்தம்
சித்திரை	சித்திரை சுவாதி
வைகாசி	விசாகம் அனுஷம்
ஆனி	கேட்டை மூலம்

ஆடி	பூராடம் உத்திராடம்
ஆவணி	திருவோனம் அவிட்டம்
புரட்டாசி	சதயம் பூரட்டாதி உத்திரட்
அர்ப்பிசி	ரேவதி அஸ்வனி பரணி [டாதி

இதைத் தெரிவிக்கிற வசனத்தை எழுத இப்பொழுது முடியாத வனுயிருக்கிறேன்.

என் கடிதத்தைக் கண்ட பத்திரிகை நேயர்களும், என்னால் உபாத்தியாயம் நடத்திவைக்கப் பட்டும் பிராமணர்கள் நேரில் கேட்டதற்கு புரட்டாசிமீ தீபாவளி என்று சொல்லியும் நானும் அனுஷ்டித்திருக்கிறேன். இதை ஐயவினுவாகச் கேட்டால் சென்ற வருஷங்களில் என்னுலும் பிர்மஸ்ரீ எம். என். சுப்பிரம ணிய சாஸ்திரிகளாலும் முறையே "சில ஸ்மார்த்த கர்ம சந்தே கங்கள். அக்ஷயதிருதியை விஷயமான ஐயவினு" இதுகள் அடை ந்த கதியையே அடையும் என்று எண்ணி இவ்விதமாய் எழுதி னேன்.

சென்ற ஸர்வஜித்து பராபவ வருஷங்களில் ஐப்பிசி மாதத் தில் இரண்டாவதாக வேறு அமாவாஸ்யை இல்லாததினுலும் இவ்வருஷம் பிந்தி 30உ யில் ஓர் அமை இருப்பதாலும் இச்சந் தேகம் இடம் பெற்றது. இதில் ஐப்பசி முதல் தேதி அமைப்பு டன் அதிக ஆச்வினமென்றும் பிந்தி 30உ அமைப்புடன் நிஜ ஆச்வினமென்றும் கூறுவோமென்ருல் அதில் தலையிட கணித சாஸ்திரிகளுக்கே அதிகாரமிருக்கலாமென்று ஒழிவடைய வேண் டியிருக்கிறது.

புரட்டாசிமீ 26உ வெளிவந்துள்ள 'அகிலபானு' பத்திரி கையில் மாஜிஸாவாதிகாரி ஜகத்குருமடம் பிர்ம்மஸ்ரீ இராமஸ்வாமி சாஸ்திரிகள் ஜகத்குரு நியம அத்தியயன பாடசாலை உபாத்தியா யர் பிர்ம்மஸ்ரீ கிருஷண சாஸ்திரிகள் இவர்களால் என் வியாஸத் திற்கு மறுப்பாக எழுதியிருப்பது நமது ஆர்யதர்மத்தில் இடம் பெருது இருந்தது மிகவும் விசனிக்கத்தகுந்தது.

புரட்டாசிமீ முதல் வாரத்திற்கு பிறகு மூன்று வாரம் பே சாதிருந்து 'உஷோப்யங்க' வசனத்திற்கு கதிகல்ப்பித்த பிர்ம்மஸ்ரீ

உபபத்திராதிபர்கள் तुष्यतु நியாயத்தைவிட்டு स्थितस्यगतिश्चिन्तनीया என்னும் நியாயத்தை தெரிவித்திருந்தால் அழகாக அர்த்தம் நிரூபித்த அவர்களுக்குத் தகுதியாயிருக்கும்.

ஆகையால் பாலிசத்தனத்தால் சிறந்த பண்டிதர்களால் அல‌ங்கரிக்கப்பட்டுவரும் நமது பத்திரிகையை மலினப்படுத்திய என் வியாஸத்தைப் பொருக்கயெண்ணிஎழுதி அநுக்கிரகிக்கபிர்ம்மஸ்ரீ உபபத்திராதிபர்களுக்கும் M. N. சாஸ்திரிகளுக்கும் என் அனேக வந்தனங்களைப்புரிந்து இத்துடன் இவ்விஷயத்தைஉபஸம்ஹாரம் செய்கிறேன்.

வி. உமாமகேஸ்வர சாஸ்திரிகள்.

குறிப்பு:— 1. புரட்டாசிமீ க்கு முன் தெரியப்படுத்தியிருப்பார்களானால் எவ்வளவோ ஸௌகரியமாயிருந்திருக்கும் என்று எழுதியிருக்கிறார்கள். ஒரு வினாவிற்குத் தகுந்த மேற்கோளுடன் விடையளிக்கவேண்டுமானால் பலக்கிரந்தங்களையும் நன்கு ஆராய்ச்சி செய்ய அபேக்ஷிக்கும் காலத்தையும் ஷை மீ 30உ நம் பத்திரிகைக்கு விடுமுறை என்பதையும் இவர்கள் நன்கறிந்திருந்தும் இவ்விதம் எழுதியதைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது

2. तुष्यतु என்கிறவிடத்தில் स्थितस्यगतिश्चिन्तनीया என்றிருந்தால் அழகாயிருக்குமென்று எழுதியிருக்கிறார். இதுவும் சரியல்ல. இந்த தீபாவளி விஷயத்தில் இவர் ஒருவர் தான் சந்தேகப்பட்டவரென்றும், இவரது சங்கைக்கு மாத்திரம் நாங்கள் விடை பகர்ந்தோமெனக்கருதி எழுதியிருப்பதாகத் தெரிகின்றது. மித்திரனில் வெளிவந்த பலருடைய சாபத்துடன் கூடிய ஆக்ஷேபங்களுக்கும் நமக்கு நேரில் வந்த துண்டுப் பிரசுரங்களுக்கும் முக்கியமாய் விடையளிக்கவேண்டி எழுதியிருக்கும் விஷயத்தில் எழுதியவருடைய உட்கருத்தைச்சற்றும் கவனியாமல் அவசரப்பட்டு இவர் சொந்த அபிப்பிராயத்தை மத்தியில் காட்டி பரிஷ்கரிப்பதுபோல் நடிப்பது பண்டிதர்களுக்கு அழகல்ல, இனியாகிலும் எழுதுகிற விஷயங்களில் அவசரப்படாமல் ஆலோசித்து எழுதினால் நன்றாயிருக்கும்.

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

(கடிதக்காரர்களின் அபிப்பிராயம் பத்திராதிபர்களைச் சாரமாட்டா)

நைஷ்டிகபிரும்மசர்ய அனுஷ்டான விஷயத்தில் ஓர் சந்தேகம்.

சுருதி ஸ்மிருதி புராணங்களில் நைஷ்டிகபிரும்மசர்ய மென்றும் உபகுர்வாண பிரும்மசர்ய மென்றும் பிரும்மசர்யம் இரண்டு விதமாக பிரிக்கப்பட்டிருக்கிறதே. அதில் நைஷ்டிக விஷயத்தில்

मुण्डो वा जटिलो वापि अथ वा स्याच्छिखाजटः ।

என்று மன்வாதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட விகல்பங்களில் எந்த நைஷ்டிகன் யாவஜ்ஜீவம் ஜடிலத்வ தர்மத்தை அனுஷ்டித்து வருகிறனோ அவனுக்கு நைமித்திகமான க்ஷௌரம் உண்டா? அதாவது யாவஜ்ஜீவஜடில நைஷ்டிகனுக்கு மாதுரு பிதுரு விஷயமான அபரக்ரியா கர்த்ருத்வம் ஏற்பட்டால் அதன் நிமித்தமாக க்ஷௌரம் உண்டா? எப்படி சாஸ்த்ர ஸம்ப்ரதாயம்.

ஸாதாரணமாய் உபாகர்மாவில் ப்ரம்மாசாரிகள் க்ஷௌரம் செய்துகொள்ள வேண்டுமென்ற விதியும் வழக்கமும் இருந்தபோதிலும் வழக்கத்தில் ஜடிலனுன நைஷ்டிகன் உபாகர்ம நிமித்தமான க்ஷௌரம் செய்து கொள்ளுகிறதில்லை. ஷை நைஷ்டிகன் உபகுர்வாணனைப்போல் ப்ரதி வருஷமும் உபாகர்ம நிமித்தமான க்ஷௌரத்தை செய்துக் கொள்வதாக ஏற்பட்டால் ஜடிலத்வவிதிக்கே இடமில்லாமல் போய்விடுமாகையால் உபாகர்ம நிமித்தமாக க்ஷௌரம் செய்து கொள்ளாதிருப்பதே உசிதமென்று ஏற்படுகிறது. இதை அனுசரித்தே மாதா பிதாக்களுடைய அபாகர்ம நிமித்தமாக க்ஷௌரம் செய்துகொள்ளாதிருப்பது உசிதமா? அல்லது ப்ராமாணுந்தரத்தால் அபரவிஷயத்தில் க்ஷௌரம் ப்ராப்தியாகுமா. இதன் நிர்ணயத்தை கூடியவரை சீக்கிரம் தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால் தயவு செய்து ப்ரமாண வசனங்களுடன்கூட இவ்வார்ய தர்மத்தின் மூலமாகவே விவரமாகத் தெரிவிக்க வேண்டுமென்று ரொம்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன். எனது சிற்றறிவிற்கு எட்டாத விஷயமாயிருப்பதால் நேயர்களின் பதிலை ஆதரவுடன் எதிர்பார்த்தவனுயிருக்கிறேன். இதில் ஜேஷ்டகனிஷ்டபேதத்தால் விசேஷ வ்யவஸ்தை உண்டானாலும் தெரிவிக்க வேணும்.

K. N. சீதாராமசாஸ்திரிகள்.